**முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை:–**திருமதி ஆ.முத்துசாரதா, பி.எல்., பி.ஜி.டி.பி.எம்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06 ஆம் நாள் புதன்கிழமை

**G.W.O.P. No.**83/2023

(TNDG010047872023)

(மைனர். ஜெப்ரின் (வயது 3 1/2 ) அவர்களுக்கு கார்டியன் நியமனம் செய்வது சம்பந்தமாக)

V. பிரான்சிஸ் .. மனுதாரர்

// எதிராக //

பிலோமினாள் கரோலின்
.. எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்னர் 22.11.2023ம் தேதியன்று வந்த போது, மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்கள் ஆர்.முருகேஷ், அ. விஜய்பானு, எம்.சிவசக்தி, திருமதி எம். காயத்திரிதேவி ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்றி ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், மனுதாரர்தரப்பு வாதம் கேட்கப்பட்டு, சாட்சி சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மைனர் குழந்தையான ஜெப்ரினுக்கு அவரது தகப்பனாரான மனுதாரரை பாதுகாவலராக விளம்புகை செய்யக் கோரியும், மைனர் குழந்தை ஜெப்ரினை மனுதார்வசம் ஒப்படைக்கும்படி எதிர்மனுதாருக்கு உத்தரவிடக்

கோரியும் இம்மனு Guardian and Wards Act Sec. 7(a), 9 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுச் சுருக்கமாவது–</u>

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் முறையே மைனர் குழந்தை ஜெப்ரினின் தந்தை மற்றும் தாயார் ஆவர். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.06.2019 ம்தேதி நிலக்கோட்டை தாலுகா, சங்கராபுரம் ஆலயத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது எதிர்மனுதாரர் Ph.D. படித்துக் கொண்டிருந்தார். திருமணத்திற்கு பிறகு மனுதாரே செலவு செய்து பட்டம் வாங்கிக் கொடுத்துள்ளார். இருவரும் திருமணம் முடிந்து மூன்று மாதங்கள் மட்டுமே மனுதார் வீட்டில் கணவன் மனைவியாக வாழ்ந்துள்ளனர். திருமண வாழ்க்கையின் பயனாக எதிர்மனுதாருக்கு ஜெப்ரின் என்ற ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த பிறகும், மனுதாரை குழந்தையை பார்க்க விடாமல் எதிர்மனுதாரும் அவரது குடும்பத்தினரும் சண்டை போட்டு வந்துள்ளனர். மனுதார் எதிர்மனுதாரையும் குழந்தையையும் தன்னுடன் அழைத்துச் சென்று எதிர்மனுதாருடன் குடும்பம் நடத்த பலமுறை முயற்சி செய்தும் எதிர்மனுதார் மனுதாருடன் சேர்ந்து வாழ வராமல் மனுதாருடன் சண்டை போட்டு வந்தார். மனுதாரர் எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றி பெறாததால் மனுதார் எதிர்மனுதாரிடமிருந்து விவாகரத்து கோரி திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் I.D.O.P. NO.

50/2020 ஐ தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கு தற்போது நிலுவையில் இருக்கும் போதே எதிர்மனுதார் ஏற்கனவே திருமணம் ஆகிய நிலையில் இருக்கும் செந்தில்குமார் என்பவருடன் சேர்ந்து இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வருகின்றனர். எதிர்மனுதாரர் மேற்படி செந்தில்குமாருடன் சட்டத்திற்கு புறம்பாக சேர்ந்து வாழ்ந்ததில், சின்னாளபட்டி கஸ்தூரிபா மருத்துவமனையில் கடந்த 01.07.2023 ம் தேதி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். மருத்துவமனை பதிவேட்டில் மேற்படி ஆண் குழந்தையின் தந்தை பெயர் செந்தில்குமார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிவேட்டில் மேற்படி செந்தில்குமார் எதிர்மனுதாரின் கணவர் என்று கையொப்பம் செய்துள்ளார். எதிர்மனுதாரரும் அவருடன் சட்டத்திற்கு புறம்பாக வாழ்ந்து வரும் செந்தில்குமாரும் மனுதாருக்கும் எதிர்மனுதாருக்கும் பிறந்த மகனாக ஜெப்ரினுக்கு வேண்டிய சவரட்சனைகளை செய்யாமலும், சத்தான உணவு மற்றும் நல்ல ஆடைகள் அளிக்காமலும், அன்புடன் நடந்து கொள்ளாமலும், அடித்து சித்ரவதை செய்வதாகவும், மேலும் மைனர் ஜெப்ரின் எதிர்மனுதாருடன் வாழ்ந்து வந்தால் மைனருக்கு உணவு, உடை, மருத்துவம் மற்றும் கல்வி போன்ற அத்தியாவசிய தேவைகள் முறையாக கிடைக்காது எனவும், மைனர் ஜெப்ரின் மனுதாரின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருக்கும்பட்சத்தில் மேற்படியாரின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமையும். மனுதார் மைனர் ஜெப்ரினின் தகப்பனார் என்பதால் மைனர் ஜெப்ரினின் நலனுக்கு விரோதமாக எப்போதும் செயல்பட மாட்டார். மனுதாரர் மைனர் ஜெப்ரினை

எதிர்மனுதாரரிடமிருந்து மீட்டுத் தரும்படி மாவட்ட ஆட்சியருக்கு 10.7.2023 ல் மனுக் கொடுத்துள்ளார்.

3. அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர், 11.10.2023 கேட்புநாளில் அழைத்தும் ஆஜராகாததால், இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சப் படுத்தப்பட்டுள்ளார்.

4. இந்நிலையில் இம்மனுவில் தீர்விற்கான பிரச்சினை, மனுதாரர் தன்னை இளவர் ஜெப்ரினுக்கு பாதுகாவலராக நியமனம் செய்ய வேண்டுமெனக் கோரும் பரிகாரம் பெற அருகதை உடையவரா? என்பதேயாகும்.

5. இம்மனுவில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார்.

6. <u>தீர்வு–</u>

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் ம.சா.1 அளித்துள்ள முதல் விசாரணை சாட்சியத்தில், மனுச்சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியமளித்து, மனுதார் மற்றும் எதிர்மனுதாருக்கிடைய 13.6.2019 ம் தேதி நடந்த திருமணம் குறித்தான திருமண அழைப்பிதழை ம.சா.ஆ.1 ஆகவும், இந்திய கிறிஸ்துவ திருமண பதிவேடு, Parish Priest, Church of Nativity of Our Lady, Silukkuvarpatti அவர்களால் மனுதார் மற்றும் எதிர்மனுதாரின் திருமணத்தை பதிவு செய்து வழங்கிய சான்று

நகல் ம.சா.ஆ.2 ஆகவும், 30.6.2022 தேதியிட்ட மைனர் ஜெப்ரினின் பிறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.3 ஆகவும், மனுதார் எதிர்மனுதார் மீது விவாகரத்து கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள I.D.O.P.No.50/2020 ன் மனுவின் அலுவலக நகல் ம.சா.ஆ.4 ஆகவும், 07.09.2023ம் தேதியன்று I.D.O.P.No.50/2020 மனுவில் விவாகரத்து வழங்கி இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணை சான்றுநகல்கள் ம.சா.ஆ.5 ஆகவும், 1.7.2023ம்தேதி எதிர்மனுதாருக்கும், ஒரு செந்தில்குமார் என்பவருக்கும் பிறந்த ஆண் குழந்தையின் பிறப்புச் சான்று நகல் ம.சா.ஆ.6 ஆகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி சமயநல்லூர் அரசுஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் வழங்கிய பதில் அசல் ம.சா.ஆ.7 ஆகவும், மனுதாரரின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டை நகல் ம.சா.ஆ.8 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.9 ஆகவும், மனுதாரர் எதிர்மனுதார் மீது அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட மனு ஏற்பு ரசீது (மனு எண்.380/2023) அசல் ம.சா.ஆ.10 ஆகவும், மனுதார் எதிர்மனுதார் மீது நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட மனு ஏற்பு ரசீது (மனு எண்.256/2023) அசல் ம.சா.ஆ.11 ஆகவும், மனுதாரர் தனது மைனர் ஜெப்ரினை எதிர்மனுதாரரிடமிருந்து மீட்டுத் தரும்படி மாவட்ட ஆட்சியருக்கு 10.7.2023ல் கொடுத்த மனு நகல் அதற்குரிய ரசீதுடன் ம.சா.ஆ.12 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார்.

7. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.06.2019ம் தேதி நடைபெற்ற திருமணம் நடைபெற்றுள்ளது ம.சா.ஆ.1,2 வாயிலாக தெரிய வருகிறது. அவர்களின் இல்லறத்தின் பயனாக 18.03.2020 தேதி மைனர் ஜெப்ரின் பிறந்துள்ளார் என்பது ம.சா.ஆ.3 பிறப்புச் சான்று மூலம் தெளிவாகிறது. மனுதாரர், எதிர்மனுதாரர் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக, மனுதாரர், எதிர்மனுதாரை விவாகரத்து செய்ய இந்நீதிமன்றத்தில் மனுச்செய்து, I.D.O.P.No.50/2020 மனுச் செய்துள்ளதும், அதில் எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாகியுள்ள நிலையில், 07.09.2023ம் தேதியன்று I.D.O.P. No.50/2020 மனுவில் விவாகரத்து வழங்கி இந்நீதிமன்றம் உத்தரபிட்டுள்ளதும், ம.சா.ஆ.4 மற்றும் 5 மூலம் தெளிவாகிறது. இந்நிலையில், மனுதாரர்தரப்பில் முக்கிய குற்றச்சாட்டான விவாகரத்து மனுஎண்.50/2020 நிலுவையில் இருக்கும் போதே எதிர்மனுதார் ஒரு செந்தில்குமார் என்பவருடன் சேர்ந்து இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வருகின்றனர் என்றும், அவ்வாறு சட்டப் புறம்பாக சேர்ந்து வாழ்ந்ததில், அவர்களுக்கு சின்னாளபட்டி கஸ்தூரிபா மருத்துவமனையில் கடந்த 01.07.2023ம்தேதி ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது எனவும் கூறி, ம.சா.ஆ.6, 7 ஆவணங்களையும், அதுகுறித்து தான் காவல்நிலையத்தில் கொடுத்த புகார்கள் சம்பந்தமான மனுரசீதுகளை ம.சா.ஆ.10, 11 ஆக தாக்கல் செய்துள்ளார். அத்துடன் தனது இளவர் மகனின் உயிர் ஆபத்தான நிலையில் உள்ளதால் அவரை எதிர்மனுதாரர் மற்றும் செந்தில்குமாரிடமிருந்து மீட்டு தருமாறு கோரி திண்டுக்கல் மாவட்ட

ஆட்சியருக்கு 10.7.2023 ல் மனுக் கொடுத்து, அம்மனு நகலை அதன் ரசீதுடன் ம.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்துள்ளார். மேலும் அவர் தன் பெற்றோருடன் சேர்ந்து வாழ்வதை காட்டும்விதமான குடும்ப அட்டை நகலை ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவினை மறுத்து, தனது தரப்பு வழக்கை முன்வைக்கவோ, நிரூபிக்கவோ, இளவர் குழந்தைக்கு உரிமை கோரவோ எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. மேலும், இளவர் தனது பாதுகாப்பில் இல்லையெனவும் மறுத்துக்கவில்லை. ஏற்கனவே கண்டபடி எதிர்மனுதாரர் இம்மனுவில் தோன்றாத்தரப்பினராகி விட்டார். இந்த மனுவில் அமைந்திருக்கும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களையும் காணும்போது, மனுதாரர் இளவரின் தந்தை என்பதும், இளவரை பராமரித்து பாதுகாக்க உகந்த குடும்பச் சூழல் உள்ளதும், மனுதாரர் இளவரின் தந்தை எனும் நிலையில், இளவரின் நலனுக்கு பாதிப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், எதிர்மனுதாரர் மற்றொரு நபரும் வாழ்ந்து, அவர்களுக்கிடைய ஒரு குழந்தை பிறந்துள்ள நிலை மனுதாரர்தரப்பில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள நிலையில், அவ்வாறான சூழல் இளவரின் மனநிலையை பாதிக்கக்கூடும் என்பதாலும், இளவர் பெயரில் சொத்துக்கள் ஏதும் இருப்பதாக கூறப்படாத நிலையிலும், இம்மனுவின் சொல்லப்பட்டுள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஆராய்ந்து, இளவரின் நலன் காக்கப்பட வேண்டுமென்ற இயற்கை நீதியின் அடிப்படையில் மைனர் ஜெப்ரினின் தந்தையான மனுதாரர் இளவருக்கு பாதுகாவலராக இருக்க தகுதியுடையவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மைனர்

ஜெப்ரினின் இளவர் காலம் முடியும்வரை அவரது விருப்பத்திற்கு ஒருபோதும் விரோதமாக எச்செயலையும் செய்யக் கூடாது என்ற நிபந்தனையுடன், இம்மனுவை அனுமதித்து, இந்நீதிமன்றம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் V.பிரான்சிஸை இளவர் ஜெப்ரினுக்கு பாதுகாவலராக நியமனம் செய்தும், எதிர்மனுதாரர், மைனர் குழந்தை ஜெப்ரினை மனுதாரர் வசம் இன்றிலிருந்து இரண்டு மாதகாலத்திற்குள் ஒப்படைக்க வேண்டுமெனவும் செலவுதொகையன்னியில் உத்தரவிடப்படுகிறது.

இவ்உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023ம் வருடம் டிசம்பர் திங்கள் 6ம்தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/−A.முத்துசாரதா,

முதன்மை மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

1. **<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

மா.சா.1 – V. பிரான்சிஸ்
மா.சா.2 – ரெங்கநாதன்

2. **<u>மனுதார் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| மா.சா.ஆ.1 | 13.06.2019 | மனுதார் மற்றும் எதிர்மனுதாரின் திருமண அழைப்பிதழ் அசல் |
| மா.சா.ஆ.2 | 14.03.2023 | இந்திய கிறிஸ்துவ திருமண பதிவேடு, Parish Priest, Church of Nativity of Our Lady, Silukkuvarpatti அவர்களால் மனுதார் மற்றும் எதிர்மனுதாரின் திருமணத்தை பதிவு செய்து வழங்கிய சான்று நகல் |
| மா.சா.ஆ.3 | 30.06.2022 | மைனர் ஜெப்ரினின் பிறப்பு சான்றிதழ் நகல் |
| மா.சா.ஆ.4 | – | மனுதார் எதிர்மனுதார் மீது விவாகரத்து கோரி |

| | | |
|---|---|---|
| | | இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள I.D.O.P.No.50/2020 ன் மனுவின் அலுவலக நகல் |
| மா.சா.ஆ.5 | 07.09.2023 | I.D.O.P.No.50/2020 மனுவில் விவாகரத்து வழங்கி இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணை சான்றுநகல்கள் |
| மா.சா.ஆ.6 | 18.07.2023 | எதிர்மனுதாருக்கும், ஒரு செந்தில்குமார் என்பவருக்கும் பிறந்த ஆண் குழந்தையின் பிறப்புச் சான்று நகல் |
| மா.சா.ஆ.7 | 03.07.2023 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி சமயநல்லூர் அரசுஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் வழங்கிய பதில் அசல் |
| மா.சா.ஆ.8 | -- | மனுதாரரின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டை நகல் |
| மா.சா.ஆ.9 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| மா.சா.ஆ.10 | 25.06.2023 | மனுதாரர் எதிர்மனுதார் மீது அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட மனு ஏற்பு ரசீது (மனு எண்.380/2023) அசல் |
| மா.சா.ஆ.11 | 08.07.2023 | மனுதார் எதிர்மனுதார் மீது நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட மனு ஏற்பு ரசீது (மனு எண்.256/2023) அசல் |
| மா.சா.ஆ.12 | 10.07.2023 | மனுதாரர் தனது மைனர் ஜெப்ரினை எதிர்மனுதாரரிடமிருந்து மீட்டுத் தரும்படி மாவட்ட ஆட்சியருக்கு 10.7.2023 ல் கொடுத்த மனு நகல் அதற்குரிய ரசீதுடன் |

3. எதிர்மனுதாரர்தரப்பு சாட்சி, சான்றாவணம் – இல்லை

ஓம்/–A.முத்துசாரதா,

முதன்மை மாவட்ட நீதிபதி,

திண்டுக்கல்.